முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் கௌசிகர் அருளிய நித்ய பிரசன்ன ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

21.03.2019, வியாழக்கிழமை

1. **ஆன்ம பலம் பெருக்கிடவே**
   **அருட்தயவை மக்களிடை வளர்த்து**
   **ஆன்மீக ஞானசபை நடத்தும்**
   **அரங்கனே ஆறுமுக ஞானியே**
2. ஞானியே உன் பெருமை கூறி
   ஞாலமதில் **விளம்பிட சேலின் திங்கள்**
   **கனிவுபட சப்தம திகதி குருவாரம்**
   **(விளம்பி வருடம் பங்குனி மாதம் 7ம் நாள் 21.03.2019, வியாழக்கிழமை)**
   **கௌசிகர் யானும் நித்ய பிரசன்ன ஆசியை**
3. ஆசியை உலக நலமுற உரைப்பேன்
   அகிலமதில் ஞானவழித்தேடி
   நேசமுற குருமார்க்கம் அமையா
   நிலமதனில் அலைந்து திரியும் மக்களே
4. மக்களே கலியுகம் தன்னில்
   மாதவபலம் கொண்டு காத்திட
   ஆக்கமுடன் ஆறுமுகன் சக்தியாக
   அவதாரம் புரிந்த அரங்க ஞானி
5. ஞானியை குருவாக ஏற்று
   நல்கியே உண்மை சன்மார்க்க
   கனிவுமிக்க எளிய வழிமுறைகளை
   கணக்காய் உலக மக்கள் ஏற்று
6. ஏற்றுமே அரங்கா முருகா என
   இணைந்து செபதபம் செய்து
   உற்றதொரு முழுமதி கால
   உயர் பூசையும் கலந்து வருக
7. வருகவே குருவருள் பலம்
   வல்லமைபட கிட்டி முழுமைபட
   முருகப்பெருமான் அருளும் ஆசியும்
   முன்மொழிந்து வருபவர்க்கு கிட்டும்
8. கிட்டவே மக்களிடை தெளிவும்
   குறைவிலா ஞான முதிர்வும்
   தட்டாது அடைதல் கண்டு
   தனிப்பெருஞ் சக்தியாக மக்கள்

9. மக்களெல்லாம் உயர்வு கொண்டு
மாதவ பலத்தை அடைவர்
தேக்கமிலா எல்லா வழிகளிலும்
தேர்ச்சியும் மேன்மையும் கண்டு சிறப்பர்

10. சிறப்பு தரும் அரங்க ஞானியே
செயம் தரும் மகா தவசியே
மறுப்பில்லை உன்னை வணங்க
மண்ணுலகே மாற்றம் காண்கும்

11. காண்குமே இயற்கை பலமும்
கண்டுரைக்க முருகன் ஆளுமையும்
ஆன்மீக ஞான பூமியாகவும்
ஆறுமுகன் ஆட்சி காலமும் சடுதி மாறும் நித்ய பிரசன்ன ஆசி முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

**மகான் கௌசிகர் அருளிய நித்ய பிரசன்ன ஆசி நூலின் சாரம் :**

ஆன்மபலத்தினை மக்களிடம் பெருக்கிடவே மக்களிடத்து அருட்தயவினை வளர்த்து ஆன்மீக ஞானசபை நடத்தும் அரங்கமகா தேசிகனே அற்புதமான உமது பெருமைகளை உலகறியக் கூறியே உலக நலம் கருதி **விளம்பி வருடம் பங்குனி மாதம் 7ம் நாள் 21.03.2019, வியாழக்கிழமையான** இன்றைய தினமதனிலே நித்ய பிரசன்ன ஆசி நூல்தனையே கௌசிகர் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் கௌசிகர் முனிவர்.

இவ்வுலகினில் ஞானத்தினை அடைய ஞானவழிதனை தேடி தேடி அலைந்து திரிந்து தக்க குருவின் உபதேசம் கிடைக்காமல் அவதிப்படுகின்ற ஞானம் விரும்பும் நன்மக்களே இனி கவலை வேண்டாம். மாமாயை சூழ்ந்திட்ட கலியுகத்தினை பல நூறு ஜென்மங்களாக தவம் செய்து பெற்றிட்ட மகா தவப்பலனைக் கொண்டு இக்கலியுகத்தின் கோரப்பிடியினுள் சிக்கிதவிக்கும் மக்களை காத்திடவே ஆற்றலுடன் முருகப்பெருமானின் சக்தியாக அவதாரம் செய்துள்ள அரங்கமகா தேசிகனாரை அவரவரும் மனம் விரும்பி சந்தேகம் இன்றி, குலகுருவாக ஏற்றுக் கொண்டு அரங்கன் கூறும் எளிமை ஞானமாகியதும் உண்மை ஞானமாகியதுமான கனிவுமிக்க எளிமை உண்மை சன்மார்க்க வழிமுறைகளை கணக்காய் ஏற்று உயிர்க்கொலை தவிர்த்து, புலால் மறுத்து, எவ்வுயிரையும் தம்முயிர் போல் எண்ணி இரக்கம் கொண்டு பிற உயிர்களை ஒருபோதும் கடவுளின் பெயராலோ. தனக்காகவோ கொல்லாமல் இருந்து அசைவ உணவினை தவிர்த்து சுத்த சைவ உணவினை மேற்கொண்டு தம்மால் இயன்ற அளவு பசித்த ஏழைகளுக்கு பசியாற்றுவித்து வருவதுடன் குருவே தெய்வம் என்றே ஞானம் புகட்டும் குருவினை தெய்வத்தோடு ஒப்பாக எண்ணி அரங்கமகா தேசிகா முருகா என இணைந்து மனம் உருகி ஜெபதபம் செய்து வர வேண்டும்.

உலக உயிர்களெல்லாம் நன்மை அடையும் பொருட்டு தன்னலமற்ற மகா ஞானி ஆறுமுக அரங்கமகா தேசிகனார் பௌர்ணமி தோறும் செய்கின்ற ஞானபூஜைகளிலே சித்தர்கள் சிறப்பு வழிபாடுகளிலே தவறாமல் கலந்து கொண்டு, அரங்கமகானிடத்து அருளாசிகளையும் ஞானியரின் ஆசிகளையும் பெற்று வரவர, நீங்களெல்லாம் குருவருள் பலத்தினை வல்லமையுடன் பெற்று குருவருள் பெற்ற காரணத்தினாலே முழுமுதற் குருநாதன் குருவிற்கெல்லாம் மூலகுருவான முருகப்பெருமானின் ஆசியையும் அரங்கனின் தயவால் பெறுவீர்கள்.

அறியாமை இருள் போக்கும் வல்லமைமிக்க குருவருளும் அருளாசி தந்தருளும் முருகப்பெருமானின் ஆசியையும் பெற்றதினாலே மக்களே உங்களிடம் உள்ள அறியாமை எனும் இருள் நீங்கி அறிவினில் தெளிவு உண்டாகும். செம்பொருள் சிறப்பறிவாம் ஞானத்தில் முதிர்ச்சியும் தடையின்றி நீங்கள் பெற்று தனிப்பெருஞ் சக்தியாக மாறிடுவீர்கள். உயர்ந்த நிலையையும் மாதவம் செய்திட்ட பலனையும் பெறுவீர்கள். தடைகள் ஏதும் இல்லாமல் அனைத்து விதங்களிலும் தேர்ச்சியும் மேன்மையும் கண்டு சிறப்படைவீர்கள்.

நாடி வந்த மக்களுக்கு சகல சிறப்புகளையும் தந்தருளும் மகா தவசி ஆறுமுக அரங்க ஞானியே, சகல செயல்களையும் ஜெயமாக்கி தருகின்ற மகா தவசியே உம்மை மறுப்பின்றி வணங்கினால் இந்த உலகமே பெரும் மாற்றத்தை உறுதியாக அடைந்து ஞானயுகமாகுமப்பா.

அவதார ஞானி ஆறுமுக அரங்கனால் இவ்வுலகம் சகலவிதமான வளங்களையும் இயற்கை பலமும் பெற்று இயற்கை சீற்றம் ஏதும் இல்லாத இயற்கையின் ஆசி பெற்ற வளமான பூமியாக ஆகிடும். உலகினில் அரங்கா உம்மால் முருகப்பெருமானின் ஆட்சி உண்டாகும். அரங்கா உம்மால் இந்த உலகம் ஆன்மீக ஞானபூமியாக ஆகிடும். அரங்கா உமது வெளிப்பாட்டில் இவ்வுலகினில் முருகப்பெருமானின் ஆட்சி விரைந்து உண்டாகி இவ்வுலகம் ஞானஉலகமாக விரைந்து ஆகிடுமப்பா எனக் கூறுகிறார் மகான் கௌசிகமுனிவர்.

–சுபம்–